# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 16 வியாழக்கிழமை (27-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 92


## ஜி. சீ. ஈ. உயர்தர பெறுபேறுகளில் குடாநாட்டில் ஹாட்லி முதலிடம்

யாழ்ப்பாணம், பெப். 27

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில், யாழ். மாவட்டத்தில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலிடம் வகிக்கின்றது.

அந்தக் கல்லூரியிலிருந்து மொத்தம் ஆறு மாணவர்கள் 4 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். கணிதத்துறையில் ஐந்து பேருக்கும், வர்த்தகத் துறையிலிருந்து ஒருவருக்கும் 4ஏ சித்திகள் கிடைத்துள்ளன.

சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு மாணவர் முறையே கணிதம், வர்த்தகம் ஆகிய துறைகளில் 4 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து எந்த மாணவரும் 4ஏ சித்தியைப் பெறவில்லை.

பரீட்சைப் பெறுபேறுகள் கொழும்பில் நேற்று முன்தினம் வெளியாகின. பெறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் சேவைகள் நேற்று 2½ மணிநேரம் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், பெப். 27

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ், டிப்போ ஊழியர்கள் நேற்றுக்காலை திடீரென வேலை நிறுத்தத்தில் குதித்ததால் பஸ்சேவை சுமார் இரண்டரை மணி நேரம் ஸ்தம்பித்தது.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் ஆரியகுளம் இராணுவச் சோதனை நிலையத்தில் வைத்து கடமையில் ஈடுபட்டிருந்த பஸ் நடத்துநர் ஒருவர் தாக்கப்பட்டதாகவும்—

அதன் பின்னர் பஸ் பயணிகளுடன் பஸ் நடத்துநர்களும் பஸ்ஸை விட்டு இறக்கி அந்த சோதனை நிலையத்தில் நடந்து செல்லுமாறு பணிக்கப்பட்டதாகவும் தெரிவித்து —

அத்தகைய துன்புறுத்தல்களை நிறுத்தக் கோரியே வ

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் வன்செயல் முறைப்பாடுகள்; பொலீஸார் நடவடிக்கை இல்லை!

## அரசின் தலையீடே காரணமென ரணில் விக்கிரமசிங்கா குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்ரவரி 27

தேர்தல் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள், ஆதரவாளர்களுக்கு எதிராக இது வரை 162 வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இவை குறித்துப் பொலீஸில் முறைப்பாடு செய்தோம். ஆனால் ஒரு முறைப்பாடு குறித்தேனும் பொலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆளும் கட்சியின் தலையீடே இதற்குக் காரணம் ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த எம். பி. ஒருவரின் தலைமையில் மரணப்படை ஒன்று இயங்குவதாகவும்--

தாம் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அவர் தெரிவித்தார்.

பிரஸ்தாப பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் தெரிவித்ததாவது:-

இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெலவின் படுகொலைக்குப் பின்னர் நாட்டின் தென்பகுதியில் வன்முறைகள் அதிகரித்தவண்ணமுள்ளன.

ஐ. தே. கட்சி சார்பில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் மாற்றுக் கட்சியினரால் தாக்கப்படுகின்றார்கள்; அச்சுறுத்தப்படுகின்றார்கள். வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து நேற்றுவரை மொத்தம் 162 தேர்தல் வன்முறைகள் எமது கட்சியினருக்கு எதிராக நடத்தப்பட்டிருக்கின்றன.

### மரணப்படை

புத்தளம் மாவட்டத்தில் குறிப்பாக ஆனமடுவ தேர்தல் தொகுதியில் வன்முறைகள் அதிகரித்துள்ளன. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலைமையில் செயற்படும் மரணப்படை ஐ. தே. கட்சி

(8ஆம் பக்கம் பார்க்க))

## காமினி அத்துக்கோறளவின் பாதுகாவலரின் துப்பாக்கி பறிமுதல்

### வானத்தை நோக்கிச் சுட்டாராம்

கொழும்பு, பெப். 27

நிவித்திகலவில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து. ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளவின் பாதுகாப்பு அதிகாரிவசம் இருந்த துப்பாக்கி இரத்தினபுரி பொலீஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரனோவ் விமானச் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

### துருப்புக்களை ஏற்றி இறக்கும் பணியில் கடற்படை

கொழும்பு, பெப். 27

கடந்த வெள்ளிக்கிழமை 'அன்ரனோவ் 32' ரக விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் வீழ்ந்த சம்பவத்தையடுத்து, விமானப்படையிடம் உள்ள எஞ்சிய நான்கு 'அன்ரனோவ் 32' ரக விமானங்களையும் சேவையில் ஈடுபடுத்தாது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து பலாலிக்கு தினமும் 2 ஆயிரம் துருப்புக்களையும், 50 மெற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

கொக்குவில் சம்பவம்:

## சடலங்களில் ஒன்றை மனைவி அடையாளம் காட்டினார்

யாழ்ப்பாணம், பெப். 27

கடந்த திங்களன்று கொக்குவில் பகுதியில் துப்பாக்கிச் சூட்டினால் மரணமான மூவரில் ஒருவரின் சடலம் நேற்று அவரது மனைவி, பிள்ளைகளால் அடையாளம் காட்டப்பட்டது.

கொக்குவில் மேற்கு முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த கந்தையா சிவசண்முகநாதன் (வயது 41) என்பவரே இறந்தவர் ஆவார்.

வியாபாரத்தொழிலில் ஈடுபட்டு வந்த இவருக்கு 15 வயது 7 வயதுகளில் இரண்டு ஆண் பிள்ளைகளும் 14 வயதில் ஒரு பெண்பிள்ளையும் உள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஒருவர் பலி

யாழ்ப்பாணம், பெப். 27

கொக்குவில் மேற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்ததாக ஓர் இளைஞனின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சுன்னாகம் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

இறந்தவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## தமிழ்க்கட்சிகளின் ஆயுதங்களை களைய வேண்டாம் என தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

''தற்போதுள்ள நிலையில் தமிழ்க் கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் ஆகியோரிடம் இருந்து ஆயுதங்களை களையாதிருப்பதை அரசு உறுதி செய்யவேண்டும்.''

இப்படி அரசியல் கட்சிகள் பலவும் கோரிக்கை விடுத்துள்ளன.

அரசியல்வாதிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவது தொடர்பாக சபாநாயகர் கே. பி, ரத்நாயக்கா கூட்டிய மாநாட்டிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

அரச, எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் தமிழ்க் கட்சி பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

''தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்களுக்கு இருக்கும் உயிராபத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



இடை நிறுத்துவதும் பின்னர் விடுவதும்... அன்ரனோவுக்கு இதுதான் தலை எழுத்துப் போலும் !

## வாழைச்சேனையில் மோதல்

கொழும்பு,பெப். 27

வாழைச்சேனைப் பகுதியில் நேற்றும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

இந்த மோதலில் படையினர் தரப்பில் இருவரும் புலிகள் தரப்பில் ஐவரும் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளராக
பதவி உயர்வு பெற்றுச் செல்லும்
திரு. சு. இரத்தினராசா
அவர்களை
# வாழ்த்துகின்றோம்

தம் அயற் பாடசாலை
தரமுடன் திகழ
ஆக்கமும் ஊக்கமும் தந்து
அரிய பல சேவை செய்து
கடமை உரிமை நேர்மையொடு
களத்தில் இறங்கும் செயல்வீரனே!
வாழ்த்துகின்றோம் உம் பணி சிறக்கத்
வரவேற்கின்றோம் கல்விப்பணிப்பாளராய்!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்.

யா/ஆனைக்கோட்டை
றோ. க. த. க. பாடசாலை,
ஆனைக்கோட்டை. (45524)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா சபாரத்தினம்

இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், G/ 2/1, டயஸ் பிளேஸ், குணசிங்கபுரத்தில் வசித்தவருமாகிய செல்லப்பா சபாரத்தினம் அவர்கள் 23 - 2 - 97 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் சிவகாமி அம்மையின் அன்புக் கணவரும், கேசவமூர்த்தி, தனலட்சுமி, சாந்தலட்சுமி, அன்பழகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகனாம்பாள், இராசதிலகம், சண்முகராசா, மாதினி ஆகியோரின் மாமனாரும், அரவிந்தன், சியாமளன். தாரிணி, பாமினி, கோகுல், கேசிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக றேமன்ட்ஸ் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் 24 - 2 - 97 திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பி. ப 1.00 மணிக்கு கனத்தை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
சே. இராசதிலகம்.
(மருமகன்)

(45510)

## பத்மநாதன் தயாளினி (தயா)

சங்குவேலியைச் சேர்ந்த பத்மநாதன் இந்திராணி தம்பதிகளின் அருந்தவப்புதல்வி தயாளினி 25 - 02 - 97 அன்று காலமானார். அன்னார் தயாபரன், பத்மரூபன், பத்மதீபன், பத்மதாசன், நிஷாந்தினி, உஷாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சச்சிதானந்தம் (கரவெட்டி), சிவதாசன் (லண்டன்) காலஞ்சென்ற குகதாசன் (C.T.B), கேதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகளும், இரஞ்சிதலீலா, யசோதரா (கனடா), றஜனி (லண்டன்), காலஞ்சென்ற சந்திரா ஆகியோரின் பெறாமகளும், சுப்பிரமணியம், கமலாம்பிகையின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26 - 02 - 97 அன்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பத்மநாதன் (தந்தை)

பிள்ளையார் வீதி,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (9325)

## சங்கரப்பிள்ளை சிவசம்பு

கைதடி தெற்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சிவசம்பு 24. 2. 97 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தம்பதிகளின் மகனும், முத்துக்குமாரசுவாமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தேவகியின் அன்புக் கணவரும், செந்தூரனின் (பழைய மாணவன், யா/சென்பற்றிக்ஸ் கல்லூரி, மாணவன் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) பாசமிகு தந்தையும், தங்கம், தம்பிப்பிள்ளை (பொட்ஸ்வானா) ஆகியோரின் அருமைத் தம்பியும், காலஞ்சென்ற சண்முகம், பவானீதேவி, ஸ்ரீகாந்தன் (இ. போ. ச. கோண்டாவில்), கிருபாலினி, தயாபரி (ஆசிரியை, யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி), குமுதினி (ஆசிரியை, யா/கைதடி விக்கினேஸ்வரா வித்), விஷயலட்சுமி, கௌரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கந்தப்பசேகரம் (விக்கினேஸ்வரா களஞ்சியம், சாவகச்சேரி), சூரியகுமாரன் (இ.போ.ச கோண்டாவில்) ஆகியோரின் சகலனும், யமுனாமலரின் சகோதரரும், Dr அருட்சேந்தன், Dr ஞானச்சேந்தன், Dr தவச்சேந்தன், சிவஞானம், சிவச்செல்வி, சிவரூபன், சிவகஜன், சிவலக்ஷ்மன், ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கோகுலரமணன், மயூரன் ஆகியோரின் ஆசையப்பாவும், கமலேஸ்வரி நித்தியானந்தன் (ஆசிரியை - மன்னார்), சிவகுமாரன், செல்வகுமாரன், ஜனசரூபன், ஐங்கரன், பரதகுமரன், கங்காசுதன் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1 - 3 - 97 இல் கனத்தை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. முத்துக்குமாரசாமி.

(9327)

## கலைப்பீட மாணவரின் கலை வாரம்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் கலைப்பீட மாணவர்களின் கலைவார நிகழ்வுகளில் நேற்றும், நேற்று முன்தினமும் கலைப்பீட மாணவர்களின் மெய்வல்லுநர் போட்டிகளும், பட்டிமண்டபமும் நடைபெற்றன. (இ- 15)

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.27

கைதடி சைவச் சிறுவர் இல்லத்துக்கு சுன்னாகம் றோட்டறக்ட் கழகம் ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

றோட்டறக்ட் கழகத்தின் செயலாளர் ரீ, ஆரணி அண்மையில் இவற்றை இந்து சமயப் பேரவையின் செயலாளர் திரு. சக்தி கிரீவனிடம் கையளித்தார். றோட்டறக்ட் கழகத்தின் தலைவர் ரி. வாமதேவன், பொருளாளர் வி. சே. ரவிகரன் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (ஐ)

## தபாற்பெட்டி இல்லை

சாவகச்சேரி, பெப். 27

சாவகச்சேரி சங்கத்தானை உபதபால் நிலையத்தில் தபாற்பெட்டி இல்லாததால் கடிதங்களை அஞ்சலில் சேர்ப்பதற்கு பொதுமக்கள் சிரமப்படவேண்டியுள்ளது.

தபால் நிலையம் மூடப்பட்டுள்ள சமயங்களில் பொதுமக்கள் கடிதங்களை தபாலில் சேர்க்க முடியாதுள்ளது. (ஐ-31)

## இந்துப் பேரவை கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 27

சகல இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூரில் உள்ள யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

விக்னா
கல்வி நிறுவனம்
கணக்கியல்
திரு. பாலவாசன்
AL 97
பங்குடைமை இறுதிக் க/கு
(குறை மாதம்)
பிரிவு II 1-3-97 3மணி
பிரிவு II 2-3-97 8மணி
★ அனுமதிகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.
(45526)

போட்டோ பிரதிகள்
நவீன மெஷினில்
சகலவிதமான போட்டோ
பிரதிகளையும்
★ பெரிதாக்கியும்
★ சிறிதாக்கியும்
குறைந்த கட்டணத்தில்
உடனடியாகப்
பெற்றுக்கொள்ள
கிளீன்-கட்
(ராணி சினிமா
அருகாமையில்)
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(9330)

## அநுராதபுரம் பஸ் நிலையத்தில் ரி - 56 ரக துப்பாக்கி ரவைகள்!

கொழும்பு, பெப்ரவரி 27

அநுராதபுரம் பஸ் நிலையத்தில் உள்ள தண்ணீர்க் குழாயில் இருந்து 100 ரவைகளைப் பொலீஸார் கைப்பற்றினர்.

கடந்த திங்கட்கிழமை பொலீஸாருக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்து பஸ் நிலையப் பகுதியில் பொலீஸார் நடத்திய தேடுதலின் போதே ரி - 56 ரக துப்பாக்கிக்குரிய இந்த ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த ரவைகள் எப்படி அங்கு வந்தன? ஏன் கொண்டு வரப்பட்டன? என்பது குறித்துப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-150-3)

## பொலீஸார் சோதனையிட்ட போது அமைச்சரின் துப்பாக்கி வெடித்தது

கொழும்பு, பெப். 27

தென்மாகாணசபை அமைச்சர் ஒருவரால் கையளிக்கப்பட்ட றிவோல்லர் ஒன்றைப் பொலீஸார் சோதனையிட்டனர். அப்பொழுது அது வெடித்து வீட்டுக்குச் சேதத்தை ஏற்படுத்தியது. இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தென்மாகாண சபை அமைச்சரான சந்திரா கென்னடி என்பவரின் வீட்டைப் பொலீஸார் சோதனை செய்தனர்.

தம்மிடம் றிவோல்வர் மட்டுமே உள்ளது என்று தெரிவித்து அதைப்பொலீஸாரிடம் அவர் ஒப்படைத்தார்.

அந்த றிவோல்வரில் இருந்த சன்னங்களைப் பொலீஸார் சோதனையிட்ட சமயம் அது வெடித்தது.

அப்பொழுது அமைச்சரின் வீட்டுக் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின. (இ-3-150)

## நிராகரிக்கப்பட்ட 4 மனுக்களை தேர்தல் ஆணையாளர் ஏற்றார்

கொழும்பு, பெப். 27

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட 4 வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ள தேர்தல் ஆணையாளர் உடன்பட்டுள்ளார்.

இதனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதி சொலிசிஸ்ரர் ஜெனரல் கமலசபேசன் நேற்றுத் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பிரதேச சபைக்காக முன்வைக்கப்பட்ட மக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்புமனுவும் ஐ. தே. க. சார்பில் குண்டகசாலை, கங்க இகலகொறளே, லங்காபுர பிரதேச சபைகளுக்காக முன்வைக்கப்பட்ட வேட்புமனுக்களும் இதன் மூலம் செல்லுபடி ஆகும்.

நிராகரிக்கப்பட்ட மேலும் 14 வேட்புமனுக்களின் விசாரணைகளை நீதிமன்றம் நாளை வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். (இ-4)

## ஐ. ஐ. தே. மு. உறுப்பினர் சிலர் அரச வேட்பாளர் பட்டியலில்

போக்குரத்து மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உள்ளூராட்சித் தேர்தலில் நடுநிலைமை வகிக்கப்போவதாக முடிவு எடுத்திருந்த போதிலும், அந்த முன்னணிப் பிரமுகர்கள் சிலர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் போட்டியிடுவது தற்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு போட்டியிடுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில்லை என்று ஸ்ரீமானி அத்துலத்முதலி முடிவு செய்துள்ளார்.

உ
ஸ்கந்தன் துணை
''உண்மையே உயர் அறம்''
யா/ ஸ்கந்த வரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.
இளைப்பாறிய எமது பிரதி அதிபர்
திரு. கனக. புவனேந்திரநாதன்
அவர்களின்
## சேவை நலம் பாராட்டுவிழா

மேற்படி விழா 1997 — 02 — 28 வெள்ளிக்கிழமை முற்பகல் 9. 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் பெற்றோர், பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வணக்கம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள்,
கல்லூரி அபிவிருத்திச் சங்கம்.

கந்தரோடை,
சுன்னாகம். 27-2-97 (சி/210)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவன்
செல்வன் க. குமணன் அவர்களின் தந்தையார்
### அமரர் சி. கந்தசாமி

அவர்கள் 25 - 02 - 97 இல் காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- விஞ்ஞானபீட 3ஆம் வருட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(45521)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊசி மூலம் "எய்ட்ஸ்" பரப்பும் கும்பல் குறித்து எச்சரிக்கை!

## சென்னை நகரில் பீதியூட்டும் புதுவகைச் சம்பவங்கள்

சென்னை, பெப். 27

ஸ்கூட்டரிலும், மோட்டார் சைக்கிளிலும் செல்வோரிடம் "லிப்ட்" கேட்கும் கும்பல் ஒன்று குறித்து விழிப்புடன் இருக்குமாறு பொலீஸ் ஆணையாளர் ராஜகுமாரன் சென்னை நகர மக்களுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

சென்னை நகரின் முக்கிய இடங்களில் இடம்பெற்றுவரும் விநோதமான, ஆனால் பயங்கரமான சம்பவம் குறித்து செய்திகள் வெளியாகியுள்ளன.

ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் பயணம் செய்வோரிடம் தாமும் வருவதாகக் கூறி இளைஞர் கும்பல் ஒன்று ''லிப்ட்'' கேட்டுவருவதாகவும் —

அவர்களது "லிப்ட்'' டை ஏற்று அவர்களுக்கு உதவும் நோக்கோடு அவர்களை ஏற்றிச் செல்வோருக்கு இறுதியில் அதிர்ச்சிகரமான செய்தி ஒன்று தெரியவருகிறது.

''ஊசி போடும் ' சிறிஞ் ' மூலம் உமது உடலில் ' எய்ட்ஸ் ' கிருமியைஏற்றியுள்ளோம்'' என்று எழுதப்பட்ட ஸ்ரிக்கர் ஒன்று அவர்கள் மீது ஒட்டப்படுகிறது.

இச் செயலில் ஈடுபட்டுவரும் இளைஞர் கும்பல் குறித்தே எச்சரிக்கையாக இருக்குமாறு பொலீஸ் ஆணையாளர் சென்னை வாசிகளை எச்சரித்துள்ளார்.

ஊசி மூலம் எய்ட்ஸ் கிருமியை உடலில் செலுத்தியதாக அவர்கள்கூறுவது உண்மையா அல்லது பொய்யா என்பது தெரியவில்லை; எனினும் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

# ரஷ்ய பிரதமருக்கு விரைவில் கல்தா!

## அதிபர் யெல்ட்சின் முடிவு

ரஷ்யப் பிரதமர் விக்டர் செர்னோமின் விரைவில் பதவிநீக்கம் செய்யப்படுவார்.

ரஷ்ய பத்திரிகையான ''இஸ்வெஸ்தியா'' இத்தகவலை அதன் முதற் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது. பிரதமரை பதவி நீக்குவது என்ற முடிவை ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் ஏற்கனவே எடுத்துவிட்டார் என்று கிரெம்ளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தனது முடிவை யெல்ட்சின் எப்போது வெளியிடுவார் என்பதையே சகலரும் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி யெஸ்ட்சின் இதனை அறிவிப்பாளர் என்று எதிர்பார்க்கப்படுவதாக ''இஸ்வெஸ்தியா'' தெரிவித்துள்ளது.

கடும் சுகவீனத்தில் இருந்து மீண்டுள்ள ஜனாதிபதி யெல்ட்சின் தனது தீவிர அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்திருக்கிறார். (ஐ)

# சர்வதேச ரீதியில் கண்ணிகளை தடை செய்யுமாறு வலியுறுத்து

ஜோகனர்ஸ்பேர்க், பெப். 27

கைவசமுள்ள கண்ணி வெடிகளை அழித்து விடுவது என்றும், இனிமேல் அவற்றை உற்பத்தி செய்வதில்லை என்றும் தென்னாபிரிக்கா அறிவித்துள்ளது.

பெரும் உயிர், உடல் சேதங்களை ஏற்படுத்தி வரும் கண்ணி வெடிகளை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் சர்வதேச ரீதியாகத் தடை செய்யப்பட வேண்டும் என்று மொஸாம்பிக் நாட்டு அதிபர் சிஹனுக் தெரிவித்துள்ளார்.

கண்ணி வெடிகளை சர்வதேச ரீதியாகத் தடை செய்வது குறித்து மொஸாம்பிக் தலைநகரில் நடைபெற்று வரும் சர்வதேச மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் சுமார் 70 நாடுகளில் 10 கோடி நிலக்கண்ணிகள் விதைக்கப்பட்டுள்ளன என்றும் —

அங்கோலா, ஆப்கானிஸ்தான், கம்போடியா ஆகியன இதனால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் முக்கியமானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிகளை உற்பத்தி செய்யும் பிரிட்டன், சீனா ,ரஷ்யா போன்ற நாடுகள் கண்ணி வெடிகளைத் தடை செய்வதை எதிர்த்து வருகின்றன. (ஐ)

## ★ மாநகர சபைத் தேர்தல்கள்

# காங்கிரஸ் கட்சிக்கு மேலும் பின்னடைவு!

அடுத்தடுத்து தோல்விகளைச் சந்தித்து வரும் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தலில் மேலும் ஒரு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

புதுடில்லியிலும் மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவிலும் நடந்த மாநகராட்சித் தேர்தல்களிலும் காங்கிரஸ் படுதோல்வியைச் சந்தித்து விட்டது.

மகாராஷ்டிராவில் கடந்த மாநகராட்சித் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி இன்னமும் அந்த மக்கள் காங்கிரஸ் கட்சி மீது கொண்டுள்ள வெறுப்பைக் காட்டுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

மும்பாய் மாநகர சபைத் தேர்தலில் சிவசேனை — பாரதீய ஜனதா கூட்டணி வெற்றியீட்டியுள்ளது. மகாராஷ்டிரா மாநில ஆட்சியும் இந்தக் கூட்டணியின் கைகளிலேயே உள்ளது.

புதுடில்லி மாநகராட்சித் தேர்தல்களிலும் பாரதீய ஜனதா பெரு வெற்றியீட்டியிருக்கிறது. காங்கிரஸ் கட்சி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. (ஐ)

## அமெரிக்கத் தயாரிப்பான

# நவீன கணனியை ரஷ்யா பெற்றது குறித்து அதிர்ச்சி!

மொஸ்கோ, பெப். 27

ரஷ்யாவுக்கு நவீன தொழில் நுட்ப சாதனங்களை விற்பனை செய்ய அமெரிக்காவில் விதிக்கப்பட்டிருக்கும் தடையையும் மீறி—

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நவீன கணனி ஒன்றை தாங்கள் வாங்கியிருப்பதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெயர் குறிப்பிடப்படாத இடைத்தரகர் ஒருவர் மூலம் இந்த நவீன கணனியைத் தாங்கள் பெற்றுக்கொண்டதாக ''நியூயோர்க் டைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தங்கள் வசமுள்ள அணு ஆயுதங்களின் கையிருப்பை துல்லியமாகக் கணக்கெடுப்பதற்காகவே இதனைத் தாங்கள் வாங்கியிருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

''சுப்பர் கொம்பியூட்டர்கள்'' எனப்படும் இந்த நவீன கணனியை தங்கள் அணுஆயுத ஆற்றலை அதிகரிக்க ரஷ்யா பயன்படுத்தக்கூடும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ஐ)

# உலக அரங்கில்

## விண்கலத்தில் தீச்சுவாலை

மொஸ்கோ, பெப். 27

விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் ரஷ்ய சோதனைக்கலத்தில் நேற்று திடீரென தீச்சுவாலைகள் எழுந்ததாகவும் —

சோதனையில் ஈடுபட்ட விண்வெளிவீரர்கள் 7நிமிடத்திற்குள் தீயை அணைத்துவிட்டனர் என்றும் — விண்வெளி வீரர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## பெனாஸீரின் கோரிக்கை இது

சுட்டுக்கொல்லப்பட்ட தனது சகோதரரின் சடலத்தை மீண்டும் புதைகுழியில் இருந்து தோண்டி எடுத்து பரிசோதனை நடத்த வேண்டும் என்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோ கேட்டுள்ளார்.

திருமதிபெனாஸீர்பூட்டோவின் சகோதரர் முர்தாஸா பூட்டோ கடந்த செப்ரெம்பரில் கராச்சியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட இந்த கொலை விசாரணைச் சபை முன் சாட்சியமளித்த பெனாசீர் பூட்டோ இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

முர்தாஸாவின் கொலை பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த பிரிட்டிஷ் குழுவின் அறிக்கையில் முர்தாஸாவின் மெய்ப்பாதுகாவலரே அவரை முதலில் சுட்டார் என்று கூறப்பட்டுள்ளது. எனவே சடலத்தை தோண்டி அதிலிருந்து உண்மையான குண்டைவெளியே எடுக்க வேண்டும் — என்று பெனாஸீர் தெரிவித்துள்ளார்.

# வசதி குறைந்த மாணவிகளுக்கு உடுபுடைவைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 27

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் கடந்த வாரத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளையும் சேர்ந்த வசதி குறைந்த மாணவிகளுக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

கொழும்பு ஹிந்து கவுன்ஸிலின் தலைவர் யோகேந்திரா துரைசாமி அன்பளிப்புச் செய்த நிதியைக் கொண்டு, கூ,மொ.வியூடாக அனுப்பப்பட்ட உடுபுடைவைகளே வசதி குறைந்த மாணவ, மாணவிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா உதயனுக்குத் தெரிவித்தார்.

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மற்றும் சில பாடசாலை மாணவிகளுக்கும் இலவச உடுபுடைவைகள் வழங்கப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஹிந்து கவுன்ஸில் அனுப்பிய நிதியில் இருந்து யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு மாணவி ஒருவருக்கு இலவச மூக்குக் கண்ணாடியும் கடந்த பூரணை தினத்தன்று வழங்கப்பட்டது. (அ)

## பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள்

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் பணிபுரிந்த பயிலுநர் பட்டதாரிகளுக்கு வடக்கு கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சினால் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான பயிலுநர் பட்டதாரிகளுக்கு வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் கடமையாற்ற நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மார்ச் முதலாம் திகதி தொடக்கம் இந் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. (ஐ-117)

# மோட்டார் ஆயுதங்களை கையாள றிசேர்வ் பொலீஸாருக்குப் பயிற்சி

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் படை முகாம்களில் படையினருடன் இணைந்து பணியாற்றும் றிசேர்வ் பொலீஸாருக்கு கனரக மோட்டார் ஆயுதங்களைக் கையாள்வதில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

4 ஆயிரம் மீற்றர் தூர வீச்சுக் கொண்ட 81 மி.மீ. ரக மோட்டார்கள் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் உள்ள முகாம்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தன.

வடக்கு கிழக்கில் உள்ள சகல முகாம்களுக்கும் இந்த மோட்டார்களை வழங்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

81 மி.மீ மோட்டார்களை கையாள்வது தொடர்பாக வடமத்திய மாகாணத்தில் உள்ள இராணுவப் பயிற்சி நிலையத்தில் வைத்து 24 றிசேர்வ் பொலீஸாருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வேளை தற்போது வடக்கு கிழக்கில் பணியாற்றும் 17 ஆயிரம் றிசேர்வ் பொலீஸாருக்கும் இந்தப் பயிற்சியை வழங்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் 17 ஆயிரம் றிசேர்வ் பொலீஸாரும் துணை இராணுவ பிரிக்கேட்டாக படையினர் கைப்பற்றும் பகுதிகளில் முன்னணி காவலரண்களில் பணியாற்றுவர்; அத்துடன்காவற் கடமைகளிலும் ஈடுபடுத்தப் படுவர்.

இதேவேளை —

''எடிபல'' இராணுவ நடவடிக்கை மூலம் படையினரால் கைப்பற்றப்பட்ட மன்னார் — வவுனியா வீதி, வவுனியா — மதவாச்சி வீதி ஆகியவற்றை பாதுகாக்கும் கடமையில் இராணுவத்தினருடன் சேர்ந்து 4 ஆயிரம் றிசேர்வ் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# முக்கிய இலக்கு மீது புலிகள் தாக்கலாம்!

'எடிபல' இராணுவ நடவடிக்கையின் போது படைகள் கைப்பற்றிய பிரதேசத்தில் முக்கிய இலக்கு ஒன்றின் மீது பாரியதாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் இட்டமிட்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது என சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் கூடுதல் படையினரும் பொலீஸாரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

'எடிபல' இராணுவ நடவடிக்கையின் போது நேரடி மோதல்களை புலிகள் தவிர்த்ததன் காரணம், தமது போராளிகளை இழக்காமல், அவர்களைக் கொண்டுதாக்குதல் நடத்தவே என சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய லுமாலா (Lumala) ஆண்கள் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 17/10, சந்தானமாதா வீதி, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி. (45487)

### மணமகன் தேவை

அச்சுவினி நட்சத்திரம் 39 வயது நிரம்பிய இந்து மணமகளுக்கு மணமகன் தேவை. சாதகக் குறிப்புகளுடன் தொடர்பு கொள்ளவும். இல. 592, மே/பா ''உதயன்'' யாழ்ப்பாணம். (45502)

### SPOKEN ENGLISH

சுலபமான முறை, தனிப்பட்ட அவதானம், சிறுகுறுப்பாக, ஆங்கிலத்தில் கதைக்க, எழுத, வாசிக்க பயிற்சி. ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி. மே/பா ஜெயந்தி ஸ்ரோர்ஸ், 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (45488)

## விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 27

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி.ர. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 27

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் திரு. செ. சிவநடராசா தலைமையில் நடைபெறும்.

உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். புனித மரியாள் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் கி. தார்சீசியஸ் தலைமையில் நடைபெறும். யாழ். கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. தானையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (உ)

## வாசிகசாலை புனரமைப்பு

கொழும்புத்துறை, பெப். 27

சங்கரத்தை சனசமூகநிலையம்புனரமைப்புச்செய்யப்பட்டுள்ளது: நிலையத்தின் சார்பில் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள விருப்பதாக அதன் தலைவர் தெரிவித்தார். (ஐ-30)

## புண்ணிய நாச்சியார் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 27

புண்ணிய நாச்சியார் தினமும், பரிசளிப்பு விழாவும் கடந்த 19 ஆம் திகதி நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றன.

கல்வி வலயம் 2 பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். இராசையா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சைவநெறித்தேர்வு, பண்ணிசைப் போட்டி ஆகியவற்றில் பரிசுபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கினார்.

மாணவர்களின் விரிவுரைகள், திருமுறை ஓதுதல், நடனம் ஆகியகலைநிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெற்றன. (ஐ)

---

## IN MEMORIUM

**SELINA JEYARANEE Mandalanayagam**

With out a hum
With out a word
Your parting was sudden
And too full of pain

Your ever Sorrowing
**dear ones**
Sri Lanka & Canada.

(45474)

---

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

### திருமதி செல்லம்மா பூபாலபிள்ளை

எமது திணைக்கள உத்தியோகத்தர்
**திருமதி நேசரத்தினம் சண்முகராசாவின்**

அன்புத் தாயார் திருமதி செல்லம்மா பூபாலபிள்ளை அவர்களின் மறைவையொட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்,
**கமநலசேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்.**

பெரும்பாக உத்தியோகத்தரும்,
நிலைய உத்தியோகத்தர்களும்,
**கமநல சேவை நிலையம், நல்லூர்.**

பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்,
**பயிர்காப்புறுதிச் சபை, யாழ்ப்பாணம்.**

(45499)

---

## ஹாட்லிக் கல்லூரி

### அதிபர் க. நடராசா

அவர்கள்
சேவை ஓய்வு பெறுவதையொட்டி

## சிறப்பு நிகழ்வு

நாள்: **15-03-1997 சனிக்கிழமை**
நேரம்: **நண்பகல் 12-30 மணி** தொடக்கம்
இடம்: **கல்லூரி மண்டபம்**

★ மதியபோசனம்
★ பாராட்டுரைகள்
★ கௌரவித்தல்

நிகழ்ச்சியில் பங்குபெற விரும்பும் பழைய மாணவர்கள் **05-03-1997**-க்கு முன்னர் இணைச் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு ரூபா 100/ஐச் செலுத்தி பங்கு பெறுதலை உறுதி செய்து கொள்ளுங்கள்.

நன்றி.

தொடர்பு:


| | |
|---|---|
| **ந. குணசீலன்** | **வ. செல்வராசன்** |
| ஹாட்லிக் கல்லூரி, | மந்திகை, புலோலி. |
| பருத்தித்துறை. | |

**ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்**

(45493)

---

## 2 ஆம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 28 — 03 — 1911

மறைவு: 20 — 02 — 1995

### அமரர் பண்டிதர்
### அம்பலவாணர் பொன்னுத்துரை

பாசமுடன் பெற்று பகல் இரவாய்ப் பாடுபட்டு
பார்புகழ அனைவரையும் பல்கலை செல்லவைத்து
பண்பான மருமக்கள் பாரினில் தேர்ந்து இணைத்து
பண்புடனும் அன்புடனும் அன்னையையும்
அரவணைத்து
மேதினியில் மேன்மையுடன் நாம் வாழ வழி வகுத்த
தலைவா!
ஆண்டுகள் இரண்டல்ல ஆயிரம் தான் போனாலும்
மறைந்திடுமா உங்கள் நினைவலைகள் மனைவி
மக்கள் மருமக்கள் மனதிருந்து.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மண்கும்பான் பிள்ளையாரை வேண்டுகின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், உறவினர்கள்.**

பொற்பதி,
வேலணை.

(9324)

---

சிவமயம்
முருகன் துணை
**நீர்வேலி**

## கந்தசுவாமி கோயில்
## விசேட மகாசபைக் கூட்டம்-1997

ஷ மகாசபைக் கூட்டம் **1997-03-15** ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணி புதிய நேரம்)க்கு ஆலய மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. க. சி. பகவத்சிங்கம் தலைமையில் நடைபெறும். சபையின் போஷகர் திரு. க. கேதீஸ்வரன் (உதவி அரச அதிபர், கோப்பாய்) அவர்களும் கலந்துகொள்கின்றார். மகாசபை அங்கத்தவர்கள், உபயகாரர் தவறாது சமுகமளிக்கவும்.

**முக்கிய குறிப்பு:**

1. அங்கத்தவர்கள் அனைவரும் 1997ஆம் ஆண்டு பங்குனி மாதம் வரையான சந்தாப்பணத்தை **1997-03-14** ஆம் திகதிக்கு முன் சபையின் பொருளாளர் திரு. த. சோதிலிங்கம் அவர்களிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. மேற்படி காலாவதியான தினத்துக்கு முன் சந்தாப் பணம் செலுத்தத் தவறியவர்கள் பொதுக் கூட்டத்தில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.
3. புதிய அங்கத்தவராகச் சேரவிரும்புபவர்கள் இவ் வருடத்துக்குரிய சந்தாப்பணம் ரூபா 120/- ஐச் செலுத்தி உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.

பரிபாலனசபை,
**நீர்வேலி கந்தசுவாமி கோயில்.**

(45517)

---

உ
பருத்தித்துறை

## கொட்டடி சித்தி விநாயகர் தேவஸ்தானம்
### (பெரிய பிள்ளையார்)
## வருடாந்த மஹோற்சவம் - 1997

**27-02-97** வியாழக்கிழமை முதல் **08-03-97** சனிக்கிழமை வரை நடைபெறும்.

இம்முறை தவிர்க்க முடியாத காரணங்களால் மஹோற்சவத்தை தவிர்த்து பத்து தினங்களும் விநாயகப் பெருமானுக்கு (108) சங்காபிஷேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்று விநாயகர் உள்வீதி உலா வருவார்.

அனைவரும் வந்து தரிசித்து விநாயகன் அருள் பெறுவீர்களாக.

★ அர்ச்சிக்கும் குருமார் ★

சிவப்பிரம்மஸ்ரீ. ராம் கெங்காதரக்குருக்கள் (சாரதாபீடம்)
" விஸ்வ. சிவசாமிக்குருக்கள் தேவஸ்தானகுரு
" சாமி. சக்திதாச சர்மா தேவஸ்தானகுரு
" தானு. வாசுதேவக்குருக்கள் பருத்தித்துறை
" ஐ. சண்முகரத்தினக்குருக்கள் ஆலடி தேவஸ்தானம்
" சு. சுரேஸ்வரசர்மா பருத்தித்துறை
" க. சண்முகரத்தினசர்மா பருத்தித்துறை

**ஆலய குருக்களும்**
**ஆலய பரிபாலனசபையினரும்.**

(45514)

---

## மக்கள் வங்கி
### காங்கேசன்துறைக் கிளை

## வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

எமது காங்கேசன்துறைக் கிளை 1990 ஆம் ஆண்டு இடம் மாற்றப்பட்டபோது, தவறவிடப்பட்ட பதிவேடுகளில் பெரும்பாலானவற்றை கடந்த ஆறு வருடங்களின் பின்பு நாம் மீட்டு எடுத்துள்ளோம். எனவே, வாடிக்கையாளர்கள் யாழ்/கன்னாதிட்டிச் சந்தியில் அமைந்துள்ள எமது காங்கேசன்துறைக் கிளையுடன் தொடர்பு கொண்டு, தங்கள் கணக்குகளைச் சரிபார்க்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். கடந்த ஆறு வருடங்களாக வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்காக வங்கி மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**உதவிப் பொது முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்தியத் தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்.**

(சி/205)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை நிறுத்த அரசியலுக்கு அப்பால் சிங்கள - தமிழ் மக்கள் இணையக் கூடாதா?

## திருகோணமலைக் கூட்டத்தில் "யுக்திய" ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய கேள்வி

திருமலையில் நடந்த கூட்டம் ஒன்றில் யுக்திய பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய ஆற்றிய உரையின் தொகுப்பை ஈ. பி. ஆர். எல். எவ்.வின் அதிகார பூர்வ பத்திரிகையான "புதிய கண்ணோட்டம்" (மாசி 01-97) வெளியிட்டுள்ளது. அது இங்கே மறுபிரசுரமாகி உள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக கொம்பனி வீதியில் ஓர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம். அரசாங்கம் சமீபத்தில் ரி. என். எல். தொலைக்காட்சி செய்தி ஒன்றுக்காக அதன் உத்தியோகஸ்தருக்கு எதிராக எடுத்த நடவடிக்கைக்குஎதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே அந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம்.

மட்டக்களப்பில் நடந்த ஓர் இராணுவ நடவடிக்கை சம்பந்தமாக ரி. என். எல். தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்பட்ட செய்தியில் இரண்டு கருத்துக்கள் பிழையாகமுன்வைக்கப்பட்டுள்ளன என்று காரணம் கூறி, தொலைக்காட்சியினுடைய பணிப்பாளர், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பாவித்து கைது செய்யப்பட்டார்.

### பயங்கரவாத தடைச் சட்டம்

சந்திரிகா அரசாங்கம் பதவிக்கு வந்தபோது கூறப்பட்ட கருத்துக்களில் ஒன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகும். அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இது இருந்தது.

இன்று அதே தடைச்சட்டத்தைப் பாவித்து அவர்கள் சிலரைக் கைது செய்வதற்கு முற்பட்டு வருகின்றார்கள். இதுதான் இன்று தென்னிலங்கையில் காணப்படும் நிலையாகும்.

கடந்த வருடம் தென்னிலங்கையிலே நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தேர்தல்களை அரசாங்கம் பின்போட்டு வந்தது. இதற்குக் கூறப்பட்ட காரணம் என்னவென்றால், 'அவசரகாலச்சட்டம் அமுலில் உள்ளது. நாட்டிலே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே நாட்டில் தேர்தலுக்கான நல்ல சூழ் நிலை இல்லை என்பதாகும்.

பதவிக்கு வந்த சந்திரிகா அரசாங்கத்துடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் மற்றொரு அம்சமாக அமையப் பெற்றிருந்தது: கருத்துச் சுதந்திரம், மொழிச் சுதந்திரம் வழங்கப்படும் என்பதாகும். ஆனால் தற்பொழுது அதை மறைத்து, கருத்துச் சுதந்திரத்தை மறுக்கக்கூடிய அளவிற்கு நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது.

### இராணுவ அதிகாரிகளுக்கு நடந்தது என்ன?

ஜானக பெரேரா என்ற இராணுவ அதிகாரியினுடைய பெயர் உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். ஏனென்றால் அவர்தான் தற்பொழுது யாழ். மாவட்டத்தின் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார். இந்த அதிகாரிதான் கடந்த 71 ஆம் ஆண்டுப் புரட்சிக் காலத்திலே குருநாகல் மாவட்டத்திலே இராணுவ நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியவர்.

அந்நேரம், குருநாகல் மாவட்டத்திற்கு உட்பட்ட நிக்கவரட்டிய நகரத்திலே தோண்டப்பட்ட புதைகுழி ஒன்றிலே ஏராளமான இளைஞர்களுடைய சடலங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட 'ரிவிரெச' நடவடிக்கைக்கு முன்பு இதே அரசாங்கம் இவருக்கு எதிராக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

இந்த வழக்கு ஆயத்தம் மேற்கொள்ளப்பட்டபோது, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் புதைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் சார்பாக வாதிடுவதற்கு முன்வந்ததோடு மட்டுமல்லாமல், இந்த ஜானக பெரேராவுக்கு எதிராக வாதிடுவதற்கு நீதிமன்றத்திலுள்ள பெரும்பாலான சட்டத்தரணிகள் முன்வந்தனர்.

'ரிவிரெச' நடவடிக்கைக்கு பின்புதான் இவர் மீது தொடுக்கப்பட்ட வழக்கின் இரண்டாவது தவணை விதிக்கப்பட்டிருந்தது. 'ரிவிரெச' நடவடிக்கையில் அவருக்குக் கிடைக்கப்பெற்றிருந்த வெற்றியின் நிமித்தமாக அவருக்கு 'ரணவிரு' பதக்கம் வழங்கப்பட்டது. இந்த ரணவிரு பதக்கம் வழங்கப்பட்ட பின்பு இவருக்கு எதிரான வழக்குத் தவணையின் போது வழக்கை விசாரித்த நீதியரசர் 'ஜானக பெரேரா ஒரு தேசியச் செல்வமாவார். இவருக்கு எதிரான இந்த வழக்கை நான் விசாரிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது மிகவும் துரதிர்ஷ்ட வசமான சம்பவம் என்றே நான் கருதுகின்றேன்' என்று கூறியபோது ஜானக பெரேராவுக்கு எதிராக வாதாட வந்திருந்த சட்டத்தரணிகள் பின்வாங்கிய நிலையும், படுகொலையான இளைஞர்கள் சார்பா சட்டத்தரணிகள் வாதிடக முன்வராத நிலையும் அங்கே காணப்பட்டது.

நான் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டது ஜானக பெரேரா மீது இருக்கின்ற குரோத உணர்வினாலே அல்ல. யுத்தத்தினாலே பாதிக்கப்படுகின்ற மக்கள் எதிர்நோக்க நேருகின்ற நிலையை எடுத்துக் காட்டுவதற்காகவே இந்தச் சம்பவத்தை நான் இங்கு குறிப்பிட்டிருக்கின்றேன்.

### சவக்குழிகளை தோண்டி பதவிக்கு வந்தவர்

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது, சந்திரிகா அவர்கள் மேல்மாகாண முதலமைச்சராக இருந்த பொழுது மிக இரகசியமாக சில முயற்சிகளை மேற்கொண்டு இரத்தினபுரி மாவட்டத்திலே புதைக்கப்பட்டிருந்த ஏராளமான சடலங்களைக் கண்டுபிடித்த அந்தச் சம்பவத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்.

இந்த இரத்தினபுரி சவக்குழிகளைப் பற்றிய விமர்சனங்களை முன்வைத்து அதைப் பாவித்துத்தான் அவர் பதவிக்கு வந்தார். ஆயினும் இந்த 32 பள்ளி மாணவர்களைக் கொண்டு போய் புதைத்த சம்பவத்திற்குக் காரணமாக இருந்த இராணுவ அதிகாரியை பிரிகேடியர் ஆக பதவி உயர்த்தி வெலிஓயா முகாமிற்குத் தலைவராக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

இந்த யுத்தத்தைக் காரணம் காட்டியே தென்பகுதியில் சமூகத்தில் உள்ள பிரச்சினைகள் அனைத்தையும் மூடிமறைத்து வருகிறார்கள். யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது உங்களுடைய சில தேவைகளை வழங்க முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம் என்று பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களிலே மின்சாரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த சமயம், வடக்கிலே யுத்தம் புரிகின்ற இராணுவத்தினரைக் கஷ்டத்திற்கு உள்ளாக்கும் நோக்கமாகவே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதென்று பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

இப்போது சமீபகாலமாக சுகாதாரத்துறை ஊழியர்களுடைய வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்குரிய காரணங்கள் தொழில் ரீதியான காரணங்களாகும். இருந்தும் அரசாங்கம் கூறுவது என்னவென்றால், 'இந்த வேலை நிறுத்தம் இராணுவ நடவடிக்கைகளுக்கு — அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம்' என்பதாகும்.

சமீபத்தில் ஒரு இராணுவ வீரரை எக்ஸ்ரே எடுக்கத் தவறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

### தென்னிலங்கை மக்களுக்கு கூறுவது என்ன?

தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களுக்கு அரசாங்கம் கூறிவருகிற காரணங்கள் இவைதான். முன்னைய அரசாங்கம் யுத்தம் புரிந்ததினால் ஜனநாயக ஆன்மாக்கள் அழிக்கப்பட்டதாகக் கூறி பதவிக்கு வந்த சந்திரிகா அவர்கள், இப்பொழுது வழங்கியிருக்கும் ஜனநாயகத்தை நாங்கள் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் ஒரு இறாத்தல் பாணின் விலையை 3.50 சதமாக்கினார். இப்பொழுது ஒரு இறாத்தல் பாண் 7.00 ரூபாவிற்கு விற்கப்பட்டு வருகிறது. பாணின் விலையை குறைப்பதனால் அதற்கு கொடுக்கப்படும் மானியம் கூட்டப்பட வேண்டும். இந்த மானியத்தைக் கொண்டு இராணுவ வீரருடைய சம்பளத்தினை 15 ஆயிரம் வரை கொடுக்க முடியுமென குறிப்பிட்டிருந்தார்.

1982 ஆம் ஆண்டளவில் யுத்தத்திற்காக ஒரு மில்லியனுக்குக் குறைவான பணமே செலவிடப்பட்டு வந்தது. இன்று அதுபோல் 50 மடங்கு அதிகமான பணம் செலவிடப்பட்டு வருகிறது. யுத்தத்திற்காக இந்த நாட்டினுடைய தேசிய வருமானத்தில் 25சதவீதத்திற்கு அதிகமாக செலவிடப்பட்டு வருவதாக பொருளாதார அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இந்த யுத்தத்தினால் இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார நஷ்டம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். 81ஆம் ஆண்டளவில் மீன்பிடித்துறை 57 சதவீத லாபம் கிடைக்கப் பெற்றது.இப்பொழுது 29சதவீதமே கிடைக்கப் பெறுகிறது.

இலங்கையின் ஆசிரியர்களின் எண்ணிக்கையளவு இராணுவ வீரர்களும் இருக்கிறார்கள்,

நாட்டினுடைய அபிவிருத்தியைப் பற்றி நாங்கள் கவனிக்கும் பொழுது குறிப்பாக இந்நாட்டில் எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எத்தனை வைத்தியர்கள் இருக்கிறார்கள், எத்தனை ஆராய்ச்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கணித்தே அந்த நாட்டினுடைய வளர்ச்சியைப் பற்றி கணிக்க முடிகிறது.

அபிவிருத்தியடைந்த ஜப்பான் போன்ற நாடுகளிலே விஞ்ஞானிகள் 360 பேர் இருக்கிறார்கள். இலங்கையில் 5 விஞ்ஞானிகள் மாத்திரமே இருக்கிறார்கள். இவ்வாறான விடயங்கள் தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்கு மாத்திரமல்ல, இது முழுச்சமுதாயத்தையும் பாதிக்கக்கூடிய விஷயமாகும்.

### தமிழ்ச் சமூகம் என்ன செய்தது?

இந்த காரணத்தினாலே தான் கிருஷாத்தி யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டபோது கொழும்பிலே அதற்கு எதிராக நாங்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் நிகழ்த்தி வருகின்றோம். ஏனென்றால் இது நாட்டைப் பொறுத்தவரை முக்கியமான பிரச்சினையாகும்.

இதைப்போல் எல்லைக் கிராமங்களிலே சிங்கள சமூகத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி தமிழ்ச் சமூகத்தினர் என்ன நினைக்கின்றனர் என்று நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். இதே போல் தெஹிவளை ரயில் குண்டு வெடிப்பில் அல்லது புறக்கோட்டை குண்டு வெடிப்பில் இழக்கப்பட்ட உயிர்களுக்காக இந்தப் படுகொலைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் உள்ளதா என்று அறிய விரும்புகின்றேன்.

14 வருடங்கள் நடந்த யுத்தத்தினால் சிங்கள சமூக மக்கள் மத்தியிலே ஒரு பெரிய மாற்றம் காணப்படுகின்றது.

### ஆட்சேர்ப்பு பாதிப்பு

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்பு அரசாங்கம் ஏறத்தாள 10 ஆயிரம் இராணுவ வீரர்களை சேர்த்துக் கொள்வதற்கு உத்தேசித்து இருந்தும், அரசாங்கத்திற்கு ஒரு 5 ஆயிரம் இராணுவ வீரர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

'சமுர்த்தி'த் திட்டத்திற்கான இளைஞர்கள் மத்தியிலிருந்து இராணுவத்திற்குச் சேர்த்துக் கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கு எதிராக கோஷங்கள் எழும்பியதோடு, கொழும்பில் மட்டும் 85 இளைஞர்கள் சமுர்த்தியினூடாக இராணுவத்தில் சேர்ந்தனர். இராணுவத்திற்குச் சேர்ந்து கொண்டு இருக்கின்ற இளைஞர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கின்ற போது சிங்கள மக்கள் யுத்தத்தை வரவேற்கிறார்களா என்பதை உணரமுடிகிறது.

### தப்பியோடிய இளைஞர்கள்

1,25,000பேரைக்கொண்ட இராணுவத்திலே இருபத்தேழாயிரம் பேர்வரை இன்று காணாமல் போயுள்ளார்கள்; அல்லது தலைமறைவாகியுள்ளார்கள். இன்று இந்த நாட்டிலே நடக்கின்ற கொள்ளை, கொலை போன்ற சம்பவங்களிலே ஈடுபடுகின்ற இளைஞர்களில் பெரும்பாலும் 40 சதவீதத்திற்குஅதிகமானோர் இராணுவத்திலிருந்து தப்பியோடி வருபவர்கள்தான் என்று பொலீஸ் திணைக்களத்தின் அறிக்கையினூடாக தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ போயிருந்தேன். ரொறன்ரோ நகரில் ஒரு இலட்சத்திற்கு அதிகமான தமிழ் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடன் நான் கதைத்த பொழுது, பாரம்பரிய பிரதேசம் என்ற அடிப்படையில் ஏற்பட்ட யுத்தத்தினால் இன்று5 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் பாரம்பரிய பிரதேசத்தைக் கைவிட்டு இங்கு வந்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக அவர்கள் கூறியதைக் கேட்டேன்.

கடந்த மாவீரர் தினத்தன்று புலிகளின் இயக்கத்தினால்வெளியிடப்பட்டசெய்திகளிலேயே 11,800 இளைஞர்கள் தங்கள் சார்பில் வீரமரணமடைந்தார்கள் என்று கூறப்பட்டது. ஸ்ரீலங்கா இராணுவத்தில் 82 ஆம் ஆண்டு 19 சிங்கள இராணுவத்தினரே மரணித்தார்கள். 1995 ஆம் ஆண்டு 5,036 இராணுவத்தினர் இறந்தனர்; 11,80 0பேர் காயமடைந்துள்ளனர். கால்களை இழந்து நடக்கமுடியாதவர்களாக 6000, இராணுவத்தினர் இலங்கையிலே இருக்கிறார்கள்.

### யுத்தத்துக்கு பலியாகும் ஏழைகள்

எங்கள் ஊரில் லால் என்ற இளைஞர் இராணுவத்தில் சேர்ந்திருந்தார். ஒரு நாள் இரவு அதிகாலை 2 மணியளவில் அவரது பிரேதப்பெட்டி அவரது வீட்டில் ஒப்படைக்கப்பட்டது. இறந்த இளைஞருடைய சவப்பெட்டியை வைத்துக்கொள்வதற்குக் கூட அவர்களது வீட்டிலே இடம் இருந்ததாகத் தெரியவில்லை.

இது சிங்கள மக்கள் மத்தியில் மாத்திரம் நடைபெற்று வரும் நிகழ்ச்சியல்ல. வடக்கிலும் தெற்கிலும் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் வறியவர்கள் சந்திரிகாவினுடைய பிள்ளைகள் கொழும்பிலுள்ள உயர்தர பாடசாலைகளில் கல்வி கற்று வருகிறார்கள். அதைப் போல் இந்த யுத்தத்தை ஊக்குவிப்பவர்களின் பிள்ளைகளும் எந்த யுத்தத்திலும் ஈடுபடுவதில்லை. அவர்களும் அவர்களுடைய பிள்ளைகளை வேறு துறையில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த யுத்தத்திலே ஈடுபட்டு வருபவர்கள் ஏழை மக்களுடைய பிள்ளைகளாகும். எங்களுடைய சமூகத்தில் உள்ள மக்கள் நூற்றுக்கு இருபத்தைந்து வீதமானவருடைய நாளாந்த வருமானம் ரூபா இருபத்தைந்தாக இருக்கிறது. இந்த குறைந்த வருமானம் உடைய குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகள் தான் யாழ்ப்பாணத்தில் யுத்தத்திலே இறந்து வருகிறார்கள். அதேபோல் வெலிஓயாவிலும் இறந்து வருபவர்கள் இந்த குறைந்த வருமானமுடைய குடும்பத்தைச் சார்ந்த பிள்ளைகளேயாகும்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன அதிகாரத்தில் இருக்கும் போது கூறினார்: 'இந்த யுத்தத்தை 1981 டிசம்பர் 31 ஆம் திகதி முடித்து வைப்பேன்' என்று. விஜயதுங்கா ஜனாதிபதி அவர்கள் கூறினார்கள். '1993 நவம்பர் 31 ஆம் திகதியளவில் இந்த யுத்தத்தை முடித்துவைப்பேன்' என்று. அவர் சிசில் வைத்தியரட்னா அவர்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தென்னந் தோட்டங்கள் குத்தகைக்கு

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் பராமரிப்பு இல்லாமல் காணப்படும் அரச மற்றும் தனியாருக்குச் சொந்தமான தென்னந் தோட்டங்கள் யாழ். மாவட்ட தென்னந் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தினால் குத்தகைக்கு விடப்படவுள்ளன.

இத் தென்னந் தோட்டங்கள் குத்தகைக்கு விடப்படுவதன் மூலம் கிடைக்கும் பணம் அந்தந்த தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படும்.

இவ்வாறான தென்னந் தோட்டங்களைக் குத்தகை பெற விரும்புவோர் பளையிலுள்ள தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

உரிமையாளர்கள் இங்கு இல்லாத இத் தோட்டங்களே சங்கத்தினால் குத்தகைக்கு விடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## அருள்நேசனின் முறைப்பாட்டுக்கு யாழ். பிரதம அஞ்சல் அதிபர் பதில்

1997 - 02 - 24 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் நான்காம் பக்க வாசகர் திருமுகத்தில் கந்தர்மடம் அருள்நேசன் அள்ளி வீசியுள்ள அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களுக்கு பிரதம அஞ்சல் அதிபர் என்ற ரீதியில் பதிலொன்றினைத் தருதல் எனது கடப்பாடாகும். அத்துடன் எனது பதில் தவறான எண்ணங்கள் சிலவற்றினைக் களையும் என நான் கருதுகின்றேன்.

தனியொருமனிதனுக்கு மட்டும் தனியொருவனால் ஆற்றப்படும் சேவையில் நிறையே நிறைந்திருக்கும்; குறை காணல் இயலாது. ஆனால் நூற்றுக்கணக்கான ஊழியர்களுடன் சமுதாயம் முழுமைக்கும் சேவையாற்றப்படும் போது, அதுவும் இன்றைய நெருக்கடிகள் நிறைந்த நிலையில், குறைகள் ஏற்படுவதும் அவை சுட்டிக்காட்டப்படுவதும் ஏற்கப்பட வேண்டியதும் தவிர்க்க முடியாதவையே.

எவ்வாறாயினும் சுட்டிக்காட்டப்படும் குறைகளும் தவறுகளும் எமது சேவையை மேன்மேலும் சுடர்விட்டுப் பிரகாசிக்க உதவும் எரிபொருளென நாம் கருதுவதால் இத்தகைய குறைகாணலை மன நிறைவான மகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

கடந்த பல ஆண்டுகளாக நலிவுற்று சீர் கெட்டிருந்த யாழ்மாவட்ட அஞ்சல் சேவை, எமது தொடரான முயற்சியினால் தற்போது சீரடைந்து வருதல் கண்கூடு.

பின்வரும் விவரங்கள் சில விளக்கங்களை வாசகர்களுக்குத் தரும்:

கடந்த ஜனவரி முதல், அரச விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாள்கள் அனைத்திலும் சாதாரண, கடுகதிக் கடிதங்கள் அனைத்துக்கும் விமானத் தபாற்சேவை நடாத்தப்படுகிறது இதன்மூலம் 24 மணி நேரத்துக்குள் கடிதங்களை அனுப்பவும் பெறவும் முடிகிறது.

பதிவுத் தபால்களும் பொதிகளும் புனர்வாழ்வுப் பகுதியால் ஒழுங்கு செய்யப்படும் கப்பல்கள் அனைத்தினூடாகவும் ஏற்றியிறக்கப்படுகின்றன. இதற்கமைய ஜனவரி முதல் நடைபெற்ற தபால் (கப்பல்) சேவை விவரம் வருமாறு:

| பெற்றுக் கொண்டவை திகதி | பைகள் |
|---|---|
| 9-1-97 | 78 |
| 15-1-97 | 220 |
| 24-1-97 | 131 |
| 27-1-97 | 200 |
| 11-2-97 | 80 |
| 18-2-97 | 56 |
| **அனுப்பப்பட்டவை திகதி** | **பைகள்** |
| 14-1-97 | 09 |
| 18-1-97 | 33 |
| 23-1-97 | 22 |
| 1-2-97 | 22 |
| 10-2-97 | 14 |
| 19-2-97 | 21 |
| 25-2-97 | 17 |

### வாசகர் திருமுகம்

சீர் கேடுகள் நீங்குவதற்காக நாம் பெரிதும் முயல்வதை, பெருமளவில் தபால் பைகள் பெறப்படும் போது மண்எண்ணெய் விளக்கொளியில், இரவு நேரத்தில் உறக்கமின்றி உழைப்பதனால் மறுநாள் காலையில் கடிதங்கள் விநியோகிக்கப்படுவதை, எமது அலுவலகப் பதிவேடுகள் சுட்டி நிற்கும்.

அருள்நேசன் குறிப்பிட்டுள்ள 60 பொதிகள் இறுதியாக 18-2-97 இல் நாம் பெற்ற 56 பைகளையே கருதுமென எண்ணுகின்றோம்.

18-2-97 மாலையில் யாழ். அஞ்சலகம் வந்தடைந்த இப் பொதிகளுக்குள் அடங்கியிருந்த கடிதங்கள் அனைத்தும் 20-2-97 அன்று மதியத்துக்கு முன்னர் விநியோகிக்கப்பட்டு விட்டன.

அருள்நேசன் விரும்புவாரானால், அவர் எம்முடன் தொடர்பு கொண்டு எம் சேவைக்கு ஒவ்வாத முறையில் பதி[illegible]த அலுவலரைப் பற்றிய மேலதிக, வேண்டப்படும் தகவல்களைத் தந்து இத்தகைய எதிர்காலத் தவறுகளைக் களைய உதவலாம். இது அவர் மக்கள் சமுதாயம் முழுமைக்கும் அவராற்றும் பேருதவியாகும்.

நாங்கள் எங்கள் அதிகார எல்லைக்கு அப்பாற் சென்று, இவ்வாறு தாமதமாகப் பெறப்படும் கடிதங்களின் முகவரியாளர்கள் வேண்டுமிடத்து, கடிதம் விநியோகஞ் செய்யப்பட்ட திதியினை உறுதி செய்து வழங்கி, அவர்களுக்கு தபால் தாமதத்தால் ஏற்படும் கஷ்டங்களில் கணிசமான அளவினைக் குறைக்க முயல்கின்றோம்.

முன்னர் ஒரு முறை இதே பத்திரிகையில் என்னால் கூறப்பட்டமையை மீண்டும் கூற விரும்புகின்றேன்:

'அஞ்சல் சேவையாளர்கள் இன, மத, மொழி மற்றும் பிரதேச எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர்கள். உலகமெலாம் ஒரு குடும்பமென எண்ணுபவர்கள். அவர்கள் கடமையை கடனே எனக் கருதாது கடவுள் எனக் கருதுபவர்கள்.''

எனவே அவர்களை குறுகிய வட்டத்துள் நிறுத்தி குறுகிய நோக்கில் நோக்காது தூர நோக்கில் பார்க்குக.

**சு. கோடீஸ்வரன்,**
**பிரதம அஞ்சல் அதிபர்,**
**யாழ்ப்பாணம்.**

## தவக்காலச் சிந்தனை

**(16 ஆம் நாள் - வியாழன்)**

யானையின் பலம் தும்பிக்கையில்; மனிதனின் பலம் நம்பிக்கையில் என்பார்கள். மனிதன் தன்னிலே நம்பிக்கை வைக்கின்றான். பணத்திலும், பொருள் பண்டங்களிலும் நம்பிக்கை வைக்கின்றான். ஆடம்பர வாழ்விலும் பெருமை, புகழிலும் நாள்களைக் கழிக்கின்றான். ஆனால் அவன் நிறைவைக் காண்பதில்லை. அவனுடைய வாழ்வு வரட்சியானதாக, மனநிம்மதியற்றதாக அமைகின்றது. மனிதன் யாரிலே நம்பிக்கை வைக்க வேண்டுமென்றால் ''ஆண்டவரை நம்புகிறவனே ஆசி பெறுவான்'' (எரே - 17:2).

நீரூற்றருக்கே நடப்பட்ட மரமும், மரத்திலே இணைந்துள்ள கிளையும் நல்ல பசுமையையும், மிகுந்த கனிகளையும் தரும். இறை நம்பிக்கையிலே கட்டப்பட்ட வாழ்வு இலாசருக்குக் கொடுத்த சன்மானத்தையும், ஏனையவற்றிலே கட்டப்படும் வாழ்வு பணக்காரன் அனுபவித்த வேதனைக் களத்தையும் கொடுக்கக்கூடியது. மனமாற்றம் காண்பதிலேயே எமது வாழ்வு நிலை தங்கியுள்ளது. விண்ணகப் பயணத்திற்கு வேண்டிய பண்புகளை அணிந்து கொள்வோம்; எமது பயணம் தொடரட்டும்!

**- அபீர்ராஜன்**

## விலை வீழ்ச்சி

கொழும்புத்துறை, பெப். 27

குடாநாட்டுச் சந்தைகளில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 25 ரூபாவிற்கு விற்பனையாகிறது.

(ஐ-30)

## போரை நிறுத்த...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு முழு அதிகாரத்தைக் கொடுத்து வடக்கே அனுப்பிவிட்டு இந்த வார்த்தையைக் கூறினார்.

நாங்கள் தெரிவு செய்த ஜனாதிபதி அவர்களும் '97 ஆம் ஆண்டு யூன்மாதம் யுத்தத்தை நிறுத்திக் காட்டுவேன் அல்லது முடித்துக் காட்டுவேன்' என்று கூறுகிறார்.

### நாங்கள் என்ன செய்யப்போகிறோம்?

பொதுமக்களாகிய நாங்கள், ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியதையும், விஜயதுங்கா அவர்கள் கூறியதையும், சந்திரிகா அவர்கள் கூறியதையும், பிரபாகரன் அவர்கள் கூறுவதையும் கேட்டுக்கொண்டு வாளாவிருக்கப் போகிறோமா அல்லது இந்த யுத்தத்தைப் பற்றி பொதுமக்களாகிய நாம் ஏதாவது கூறவேண்டிய கடமை இருக்கிறதா என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

யுத்தத்தை நிறுத்துவதற்கு அல்லது சமாதானத் தீர்வைக் கொண்டு வருவதற்கு புலிகள் இயக்கமும் அரசாங்கமும் இணங்க வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

இந்த இரு பகுதியையும் சாராது பொது மனிதன் என்ற ரீதியிலே இங்கே நடக்கின்ற யுத்தத்தைப் பற்றி நாங்கள் கூறுவதற்கு ஒன்றும் இல்லையா, நாங்கள் கூறக் கூடாதா? இந்த யுத்தம் இயல்பாக அல்லது தானாகவே நிற்கும் வரைக்கும் நாங்கள் காத்திருக்கத்தான் வேண்டுமா? அல்லது இதற்குப் பொறுப்பாக நாங்கள் ஏதும் செய்ய வேண்டாமா? செய்ய உரிமை இல்லையா என நான் உங்களைகேட்க விரும்புகின்றேன்.

இதைப்பற்றி நீங்கள் ஆழமாகச் சிந்திப்பீர்களானால் நான் இவ்வளவு தூரம் வந்து [illegible] துக்களை கூறியதற்கு நல்ல பலன் கிடைத்ததாக கருதுவேன். ★

## நெசவுப் பயிற்சி நிலையங்கள் தென்மராட்சியில் இயங்குகின்றன

### பயிற்சியாளருக்கு ஊக்குவிப்பு பணம்

சாவகச்சேரி, பெப். 27

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ்நடத்தப்படும் கைத்தறி நிலையங்கள் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

மட்டுவில் வேரற்கேணியில் உள்ள நெசவு நிலையம் உட்பட விடத்தற்பளை, கைதடி ஆகிய நெசவு நிலையங்களும் தற்போது இயங்குகின்றன.

இந் நிலையங்களில் இருந்த சில நெசவுத்தறிகள் ஏற்கனவே காணாமல் போயுள்ளதால் இந்நிலையங்களுக்கென புதிய நெசவுத்தறி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந் நெசவு நிலையங்களில் பணிபுரிவதற்கென ஒவ்வொரு நிலையத்திற்கும் முறையே 10 பெண் நெசவுப் பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நெசவுப் பயிற்சியை மேற்படி நிலையங்களில் பணிபுரியும் நெசவு ஆசிரியர்கள் வழங்குவர்.

பயிற்சிபெறும் பெண் பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு ஊக்குவிப்புப் பணமாக 30 ரூபா வழங்கப்படவுள்ளது.

பயிற்சி பெறுபவர்கள் 6 மாதகால பயிற்சியின் பின்னர் விருப்பத்தின் பேரில் நெசவுப் பயிற்சிப் பாடசாலைக்குச் சென்று மேலதிக பயிற்சியைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இப் பயிற்சி நிலையங்களில் துவாய், படுக்கைவிரிப்பு போன்ற துணிகள் ஆரம்ப கட்டமாக தயாரிக்கப்பட்டுவருகின்றன.

(ஐ-31)

## நிவாரணம்

அச்சுவேலி, பெப். 27

பனிப்பூச்சித் தாக்கத்தினால் வெங்காயப்பயிர்ச் செய்கை சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

விவசாய சம்மேளனங்கள் மூலம் வெங்காயப்பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு நிவாரணம் தொடர்பானகோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது.

(ஐ-111)


## பெண் சமையற்காரர் தேவை

வடமாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கப் பணிமனையில் கடமையாற்றுவதற்கு அனுபவமுடைய பெண் சமையற்காரர் தேவையாக இருக்கிறது 35 வயதிற்கும் 50 வயதிற்குமிடைப்பட்டோரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். **"பிலிப்ஸ் நேர்சிங்ஹோம்"** கட்டடம்,

**இல. 228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை 06-03-97ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்க வேண்டும்; அல்லது நேரில் கொண்டுவந்து சமர்ப்பிக்கலாம். மற்றைய விவரங்களை நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
வடமாகாண புற்றுநோய்-
எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கம்.

(சி/209)

கோப்பாய்
**வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்**
**ஆலய தரும பரிபாலன சபை**

## வருடாந்தப் பொதுக்கூட்டம்-1997

மேற்படி பொதுக்கூட்டம் 1997-03-22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோயில் முன் மண்டபத்தில் நடைபெறும். கடந்த வருட அறிக்கை சமர்ப்பித்தலும், புதிய பரிபாலனசபை உறுப்பினர்கள் தெரிவும் இதில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள்:

1. உபயகாரர் அல்லாத உறுப்பினர்கள் 1996ஆம் ஆண்டுவரைக்குமான தமது சந்தாப்பணத்தினை மார்ச்சு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாகச் செலுத்தலாம். புதிதாகச் சேரவிரும்பும் உறுப்பினர் பிரவேசப் பணமாக ரூபா 60-ம் ஒரு வருட சந்தாவாக ரூபா 60-ம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து கொடுக்கலாம். மகாசபையின் அங்கீகாரத்துடன் இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
2. தற்போது மீளக் குடியமர்ந்துள்ள சகல உறுப்பினரும் தமது வரவினைச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.
3. இக்கூட்டத்தில் பிரேரணைகள், யாப்புத் திருத்தங்கள் கொண்டுவர விரும்பும் உறுப்பினர் அவற்றினை எழுத்து மூலமாகச் சபைச் செயலாளரிடம் 1997-03-15- ற்கு முன் சமர்ப்பிக்கலாம்.
4. தொடர்புகள் யாவும் ஆலயத்திலுள்ள பரிபாலன சபைக் காரியாலயத்தில் பூசை நேரங்களில் மேற்கொள்ளலாம்.
5. மிக அவசியமான திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் பொருள்கள் வாங்க வேண்டியிருப்பதாலும் ஆலயத் திருப்பணி, நேர்த்தி செய்ய விரும்பும் அடியார்கள் சபையுடன் கலந்து செய்யுமாறு வேண்டுகின்றேரம்.

**க. ஸ்ரீஸ்கந்தராசா** — **தலைவர்**
**ஐ. சிவலோகநாதன்** — **செயலாளர்**

**ஆலய தரும பரிபாலன சபை**
1997 - 02 - 27

(45518)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

…நூலகம்.

# உதயன்

## அரசநீதி செத்துவிட்டதா?

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவற்றின் கீழ் பல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு விடுதலை செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் மீது மீண்டும் வழக்குத் தொடரப்படுகின்றது.

இதனை ஆட்சேபித்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சட்டமா அதிபர் சரத் சில்வாவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பனவற்றைக் கையில் பிடித்துக் கொண்டு, 'சந்தேகத்தின் பேரில்' என்ற முத்திரையைப் பயன்படுத்திக் கொண்டு பொலீஸாரும், பாதுகாப்புப் படையினரும் தமிழ் இளைஞர்களைக் கண்டபடி கைது செய்து தடுத்து வைத்து துன்புறுத்துவது எழுபதுகளின் பிற்பகுதியிலேயே ஆரம்பமாகி விட்டது.

அதன் தொடர்ச்சியாக, சந்தேகத்தின் மீது கைது செய்யப்படுவோர் மீது வழக்குத் தொடர்ந்து நீதி வழங்குவதனைப் பின்தள்ளும் அலுவல்கள் வேண்டுமென்றே திட்டமிட்டுச்செய்யப்படுவது வழக்கம். சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து தடுத்து வைப்பதற்கான உத்தரவைப் பெறுவதோடு, அடுத்தடுத்த சட்ட நடவடிக்கைகளை அதிகாரிகள் மறந்துவிடுவது உண்டு. அதுவே நடைமுறையும் ஆக்கப்பட்டுவிட்டது.

இதனால் கைதான தமிழ் இளைஞர்கள் மீது உடனடியாகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதில்லை. அவர்கள் வருடக் கணக்காகச் சந்தேக நபர்களாகவே வைக்கப்படுகிறார்கள்; சிறைவாசம் அனுபவிக்கின்றார்கள். சித்திரவதைக்கு ஆளாகின்றார்கள்.

இத்தனைக்கும் பிறகே அவர்கள் மீதான வழக்கு விசாரணை ஆரம்பமாகின்றது. வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்புக்கிடைத்து விடுதலையாவோர் மீண்டும் கைதுசெய்யப்படுகிறார்கள். வேறு ஒருகுற்றச்சாட்டைத் தெரிவித்து சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்படுகிறார்கள்.

கைது செய்யப்பட்டு அல்லது விசாரிக்கப்பட்டு குற்றம் செய்யாதவர்கள் என்று விடுவிக்கப்படுவோர் மீண்டும் கைது செய்யப்படுவதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். விசாரித்து விடுவிக்கப்படுவோருக்கு அதற்கான சான்றிதழ் ஒன்று வழங்குவதே பொருத்தமானதும் நீதியானதுமாகும்.

ஆனால் தமிழர்கள், தமிழ் இளைஞர்கள் என்றால் அவர்களுக்கு சான்றிதழ் தேவை இல்லை. வெவ்வேறு அதிகாரிகள் தத்தமது இஷ்டப்படி தமிழ் இளைஞரை 'சந்தேகத்தின் பேரில்' என்ற சொற்றொடரின் போர்வையில் இம்சிக்கலாம் என்ற பகிரங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது!

வழக்கு விசாரணை முடிவில் விடுதலை செய்யப்படுவோரை மீண்டும் கைது செய்வது, அவர்கள் மீது மீண்டும் வழக்குத் தொடர்வது என்பன தமிழர்களைப் பொறுத்தவரை அரசின் நீதி செத்து விட்டது; மனிதாபிமானம் அழிந்து விட்டது என்ற நிலையையே மேன்மேலும் ஊர்ஜிதம் செய்கின்றன.

# யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்ற பிரெஞ்சு வைத்தியர் குழு தயார்

### பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை எதிர்பார்க்கிறது

கொழும்பு, பெப். 27

"யாழ். ஆஸ்பத்திரியில் எமது டாக்டர்கள் பணியாற்றத்தயாராக இருக்கின்றனர். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் அங்கு எமது டாக்டர்கள் சென்று பணியாற்றுவார்கள்.

இப்படி பிரெஞ்சு வைத்திய குழுவான எம். எஸ். எவ்வின் கொழும்பு அதிகாரி டாக்டர் கிளோமோ பேட்டேரெட் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் எமது டாக்டர்களின் சேவையை வழங்குமாறு சுகாதார அமைச்சு விடுத்த கோரிக்கையை எம். எஸ். எவ். ஏற்றுக்கொண்டுள்ளது என்று அவர் கூறினார்.

வன்னி மாவட்டத்தில் வைத்திய சேவையை மேற்கொள்ள கூடுதல் டாக்டர்கள மற்றும் மருத்துவ ஊழியர்களைநியமிக்கஅரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் டாக்டர் கிளோமோ பேட்டேரெட் கூறினார்.

தற்சமயம் வன்னிப் பகுதியில் தமது அமைப்பைச் சேர்ந்த நான்கு டாக்டர்கள் பணிபுரிகின்றனர்.

அந்த எண்ணிக்கை 7 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

மடுவில் உள்ள அகதிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் 3 டாக்டர்களும், உள்ளூரைச் சேர்ந்த 20 தொண்டர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3-150)

## உண்ணா விரதம் 3 ஆவது நாளாக தொடர்கிறது

கொழும்பு, பெப். 27

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதனின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று புதன்கிழமை மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

நேற்று முன்தினம்பிற்பகல் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். இராமகிருஷ்ணன் அங்கு சென்று அவரது கோரிக்கைகளைச் செவிமடுத்தார். இவரது கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை வெள்ளிக்கிழமை திருகோணமலையில் மறியல் போராட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

அதுவரையும் தமது உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு—கிழக்குமாகாணத்தில் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும்—

வடக்கு—கிழக்கு மாகாண நிர்வாகச் சீர்கேட்டை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும்—இவர் கோரிக்கை விடுத்திருப்பது தெரிந்ததே.

மட்டக்களப்பு காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது. (இ-4)

# ஆசிரிய ஆலோசகர், உ. பணிப்பாளர் 'ரியூஷன்' கொடுப்பதற்குத் தடை!

### டிவகலாலா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

இனிமேல் உதவிக் கல்விப் பணிப்பாளர்களோ அல்லது ஆசிரிய ஆலோசகர்களோ வடக்கு — கிழக்கு மாகாணத்தில் ரியூஷன் கொடுக்கக் கூடாது; ஜி. சீ. ஈ சாதாரண தர வகுப்பு வரை இவர்கள் ரியூஷன் கொடுப்பது கட்டாயமாகத் தடைசெய்யப்படுகின்றது.

இவ்வாறு வடக்கு—கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சு, டிவகலாலா கல்முனை சாஹிராக் கல்லூரியில் நடைபெற்ற பேடன் பவல் தினத்தில் பிரதம விருந்தினராசக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இன்று கல்வி உலகத்தில் ரியூஷன் கலாசாரம் தீவிரமாகப் பரவிவருகிறது. பாடசாலை எப்போது முடிவடையும் என்பதை எதிர்பார்த்துக் காத்திருந்து ஆசிரியர்களும், மாணவர்களும் ரியூஷனுக்கு முண்டியடிக்கின்றார்கள். ஆனால் அடைவு மட்டம் தாழ்ந்து கொண்டே போகின்றது.

எனவே வடக்கு — கிழக்கு மாகாணத்தில் ரியூஷன் கலாசாரத்தை ஒழிக்க மாணவர்கள் தமக்கு ரியூஷன் வேண்டுமா? வேண்டாமா? என்பதற்கான காரணங்களை நேரடியாக எனக்கு அனுப்பிவைக்குமாறு பகிரங்க வேண்டுகோள் விடுக்கிறேன்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-4)

## 590 பயணிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 27

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு பயணிகள் கப்பல் சேவை ஒன்று நாளை நடைபெற விருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

நாளை செல்லும் கப்பலில் 590 பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 188 முதல் 202 வரை, 409 முதல் 524 வரை உள்ளவர்களும், பட்டியல் இலக்கம் 533, 535, 538

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இந்துக் கோயிலுக்கு முன் புத்தர் சிலையா?

### தோட்ட தொழிலாளி உண்ணாவிரதம்

கொழும்பு, பெப். 27

இந்துக்கோயில் ஒன்றுக்கு முன்பாக உள்ள அரச மரத்தடியில் புத்தர் சிலை ஒன்றை வைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியை ஆட்சேபித்து தோட்டத் தொழிலாளி ஒருவர் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார்.

மாத்தளையில் உள்ள புப்புரஸ்ஸ என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெறுகிறது

இங்குள்ள முத்துமாரியம்மன் கோயிலுக்கு முன்பாக சி. ரவிச்சந்திரன் (வயது 24) என்ற இளைஞனே உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கொன்று நெல்பிட்டிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த நீதிவான் அரசமரத்தடியில் பௌத்த முறைப்படி வணங்க முடியுமே தவிர புத்தர் சிலையை வைக்க முடியாது என 27 – 01 - 1997 அன்று தீர்ப்பு வழங்கி இருந்தார்.

எனினும் அடுத்த கிராமத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினர் சிலர் ஒன்று கூடி நேற்று முன்தினம் மேற்படி அரசமரத்தடிக்கு அருகில் புத்தர் சிலை ஒன்றை வைத்து விகாரை அமைக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

இதற்கு ஆட்சேபனை தெரிவித்தே மேற்படி தோட்டத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் என்ற தொழிலாளி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கிட்டும் வரை சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டம் தொடரும் என்று அவர் அறிவித்துள்ளார். (இ-4)

# அன்ரனோவ்-32ரக விமான விபத்து விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன!

கொழும்பு, பெப். 27

இரத்மலானையில் 'அன்ரனோவ்—32, ரக விமானம் வீழ்ந்து நொருங்கிய சம்பவம் தொடர்பாக கல்கிஸைப் பொலீஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

விமான ஓட்டியான ரஷ்ய நாட்டவர் உட்பட 60 பேரை பொலீஸார் இதுவரை விசாரணை செய்துள்ளனர். விமானத்துக்கு எரிபொருள் நிரப்பியவரையும் இவர்கள் விசாரணை செய்துள்ளனர்.

அதே சமயம் இந்த விபத்துக் குறித்து விமானப்படை அதிகாரிகளும் தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தேசிய உளவுப்பணியகமும் தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தொடர்ந்து விமானங்கள் இழக்கப்படுவது ஒரு தேசிய பிரச்சினை என்றும்—

இதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்கவேண்டிய நிலையில் படையினர் உள்ளனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-150)

## உருளைக்கிழங்கு விலையை சீரான முறையில் பேண நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 27

உள்ளூரில் உற்பத்தியாகும் உருளைக்கிழங்கின் விலையை சீரான முறையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

✶ உருளைக்கிழங்கை நன்றாக விளைந்த பின்னர் அறுவடை செய்தால் ஒரு மாதத்தில் இருந்து இரண்டு மாதங்கள் வரை விவசாயிகளினால் பழுதடையாமல் அதனைப் பாதுகாக்க முடியும். இது பற்றிய விளக்கத்தினை விவசாய விரிவாக்கத் திணைக்களம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

★ உருளைக்கிழங்கை உரிய முறையில் பாதுகாப்பதற்கான மாதிரி முறைகள் பொது மக்களுக்கு, செயல் முறையில் விளக்கப்படும். இதற்காக விவசாயத்திணைக்களம் 50 மெற்றித் தொன் உருளைக்கிழங்கி [illegible] சாயிகளிடமிருந்து, [illegible] 40.00 ரூபா வீதம் கொள்வனவு செய்யும்.

★ இதனை நடைமுறைப் படுத்துவதற்கு உபகுழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. பிரதேச செயலர் உடுவில், விவசாயப் பணிப்பாளர் விவசாயத் திணைக்களம், உதவிப் பணிப்பாளர் கமநல சேவைகள் திணைக்களம், திட்டப் பணிப்பாளர் சர்வதேச கெயர் ஸ்தாபனம் ஆகியோர் இதில் அங்கம் வகிக்கின்றனர். (இ)

## நாளை

மாசி 17

வெள்ளிக்கிழமை

திதி: ஷஷ்டி

முன்இரவு 11-30 வரை.

நட்சத்திரம்: சுவாதி

முற்பகல் 8.03 வரை.

ராகுகாலம்: 10.59-12.29

சுபநேரம்: 6 29-7.59

[illegible]

## மாவு, சீனி தாராளம்

யாழ்ப்பாணம், பெப். 27

பலநோக்கு கூட்டுறவுச்சங்கக் கிளைகளில் தற்போது கட்டுப்பாடற்ற முறையில் மாவு, சீனி போன்ற உணவுப் பொருள்கள் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் இவ்வாறு மாவு, சீனி விநியோகிக்கப்படுவதைக் காண முடிந்தது.

ஒரு கிலோ சீனி 36.00 ரூபாவுக்கு விநியோகிக்கப்படுகிறது.

(இ-15)

## வாதுவ கப்பலில் தனியாருக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். தனியார் நிறுவனங்களுக்கான 4 ஆயிரத்து 750 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களுடன் "வாதுவ" கப்பல் நேற்று பருத்தித்துறை வந்து சேர்ந்தது.

தனியாருக்குப் பொருள் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட "சஜிந்த" என்ற கப்பல் பயணிகள் கப்பல் சேவைக்காக அரசாங்கத்தால் அமர்த்தப்பட்டுள்ளதால், வாதுவ தனியாருக்கான பொருள்களை ஏற்றி வரும் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பேறுகள் யாழ்ப்பாணத்துக்கு அனேகமாக இன்று வந்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து உதயனுக்கு நேற்று முற்கொண்டு கிடைத்த சில பெறுபேறுகள் கீழேதரப்படுகின்றன.

பரீட்சையில் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்குக் கிடைத்த மாவட்டநிலையும், அகில இலங்கை ரீதியான நிலையும் அவரவர் பெயர்களுடன் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

**ஹாட்லி**

102 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

**கணிதம்:**
★ வெஸ்லி தேவசுந்தர் தேவராஜா — 4ஏ (1 - 18)
★ சிவம் ராஜாராம் — 4ஏ (4 - 49)
★ கார்த்திகேசு சிவகணேசன் — 4ஏ (7 - 64)
★ ராஜேந்திரா ராஜ் நாராயண் — 4ஏ (9 - 78)
★ இரத்தினசபாபதி ஜெயானந்தன் 4ஏ (10-82)

**வர்த்தகம்:**
★ சின்னத்துரை சத்ஜே— 4ஏ (1 – 3),

**உயிரியல்:**
★ வரப்பிரகாசம் தினேஷ் — 2ஏபிசி (18 – 456)

**சென்ஜோன்ஸ்**

78 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

**கணிதம்:**
★ பாலச்சந்திரன் பாலமுரளி — 4ஏ (6 - 55)
★ தர்மராஜா கிருவரன் — 2ஏ 2பி (29 - 190)

**உயிரியல்:**
★ சிறிகாந்தன் கோபிசங்கர் — 2ஏ பி சி (15 - 429)
★ செல்லக்குட்டி செல்வகணேஷ் — ஏ 3பி (18 - 456)
★ பிலிப்பானந்தன் ஜோன்சன் — 2ஏ பி சி (18 - 456)
★ பொன்னுத்துரை பிரதீபன் — 3ஏ சி (22 - 488)

**வர்த்தகம்:**
★ சோமசுந்தரம் சிவகுமார் — ஏ 3பி (96 - 1060)
★ விசுவலிங்கம் கருணாகரன் — 4பி (157 - 1854)

**யாழ். இந்து**

113 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

**உயிரியல்:**
★ சிவசுப்பிரமணியம் சிவசாமபவன் — 3ஏ சி (2 - 85)
★ கைலாசநாதன் ஐங்கரன் — 2ஏ பி சி (4 - 140)

**கலை:**
★ எஸ். சிவனேந்திரன் — 3ஏ சி (9 - 240)

**கணிதம்:**
★ சிவஞானசுந்தரம் ஜெயகோபிகிருஷ்ணா — 3ஏ பி (4 - 49)
★ பரமநாதன் சியாவசன் — 3ஏ பி (8 – 74)

**வேம்படி மகளிர்**

148 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

**வர்த்தகம்:-**
★ இராமச்சந்திரன் வெண்ணிலா — 4 ஏ (8 - 87)

**கலை:-**
★ இராஜரத்தினம் விஜயகுமாரி — 3 ஏ சி (5- 171)

**கணிதம்:-**
★ விசுவநாதன் மீரா — 2 ஏ பி சி (46 – 314)

**உயிரியல்:-**
★ அருளையா பவானி — 3ஏ சி (18 - 456)

**யாழ். இந்துமகளிர்**

159 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

**உயிரியல்:-**
★ தில்லைநாதன் மதுரா— 2ஏ பிசி (9 – 344)
★ வேலாயுதபிள்ளை கலைச்செல்வி — 2ஏ 2 பி (10 - 364)
★ சிவானந்தன் சிவசக்தி— 2ஏ பி சி (33 - 731)
★ சதானந்தன் ஜனலினி — 2ஏ பி சி (33 – 731)

**வர்த்தகம்:-**
★ யேசுநாதன் சுஜாதா — 2ஏ 2பி (40 – 454)
★ குகராஜன் விமலினி — 2ஏ 2பி (32 - 322)

**கலை:-**
★ செல்லத்துரை கலைராணி— 2ஏ பி சி (29-653)
★ கதிர்காமதாசன் ராதிகா —2ஏ பி சி (46 - 730)

**சுண்டுக்குளி மகளிர்**

63 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

**வர்த்தகம்:-**
★ ஸ்பென்ஸர் நயோமி தனுஷா — 3ஏ பி (34-382)

**உயிரியல்:-**
★ தங்கராஜா கவிதா — 2ஏ 2சி (33 - 731)
★ சிவச்சந்திரன் ஜனனி— 2ஏ 2சி (33 – 731)

**கணிதம்:-**
★ சிவலிங்கம் சிவனுஜா — பி3 சி (180 – 1550)

(அ- 3– 150)

## 590 பயணிகளை...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஆகியவற்றில் உள்ளவர்களும் பயணம் செய்வதற்காக நாளை காலை 7.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(இ-3)

## சடலங்களில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவதினம் 6. 45 மணியளவில் கடைக்குச் செல்வதற்கெனப் புறப்பட்ட வேளை பத்திரகாளி கோயிலடிப் பகுதியில் வைத்தே சிவசண்முகநாதன் சுடப்பட்டதாக இவரது மனைவி தெரிவித்தார்.

சடலத்தைப் பெறுவதற்காக இவரது மனைவி நேற்று ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தார் என்றும் —

புலி உறுப்பினரின் சடலம் என்று கூறி பொலீஸார் அதனை அவரிடம் ஒப்படைக்க மறுத்து விட்டனர் என்றும் — அறியப்படுகிறது.

ஏற்கனவே அங்கு வைக்கப்பட்டிருந்த ஏனைய இரு சடலங்களுடன் சிவசண்முகநாதனின் சடலத்தையும் பொலீஸார் எடுத்துச் சென்று விட்டனர். (இ-15)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் முருகேசு குமாரவேலு

**யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின்**

இளைப்பாறிய ஆசிரியரும், கல்லூரி அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினருமான மு. குமாரவேலு அவர்கள் 21 - 02 – 97 இல் இறைவனடி சேர்ந்தார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

(45515)


## தமிழ்க்கட்சிகளின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களுக்கு ஆயுதப் பாதுகாப்புத் தேவைப்படுகிறது. ஆகவே அவர்களிடம் இருந்து ஆயுதங்களைக் களையாமல் உறுதி செய்யும் திட்டம ஒன்று முன்வைக்கப்படவேண்டும்'' என்று அரசியல் கட்சிகள் கோரின.

இது சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

இதேவேளை — கொழும்பில் இயங்கும் தமிழ்க்கட்சிகளிடம் உள்ள ஆயுதங்களின் விவரங்களை கடந்த திங்கட்கிழமை பொலீஸார் அவர்களது அலுவலகங் களுக்கு சென்று பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-3-4)

## தேர்தல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேட்பாளர் ஒருவரைத் தாக்கியுள்ளது.

இத்தகைய அரச பயங்கரவாதத்தை எதிர்த்துஅனைத்துக் கட்சிகளும்ஒன்றிணைந்து போராட வேண்டும் — என்றார்.

ஆனமடுவப் பகுதியில் மரணப்படையின் தாக்குதலுக்கு ஆளானதாகக் கூறப்படும் வேட்பாளர் வேர்ணன்டி சில்வாவும் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

அவர் தமக்கு நேர்ந்த கதி குறித்து பின்வருமாறு விவரித்தார்.

கடந்த 13 ஆம் திகதி இராணுவச் சீருடையை ஒத்த சீருடையில் எனது வீட்டிற்கு இரவு சுமார் 9 மணிக்கு ஒரு குழுவினர் வந்தனர். வந்தவர்கள் வீட்டைச் சோதிக்கப் போவதாகத் தெரிவித்தனர். எனது வீட்டில் அப்போது இருந்த எனது நண்பர்களையும் என்னையும் புக்குரல்ல இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி வாகனத்தில் ஏற்றினர்.

சிறிது தூரம் சென்ற பின் எனது நண்பர்கள் ஐவரையும் வாகனத்திலிருந்து இறக்கி நையப் புடைத்தனர்.

பின்னர் என்னை மாத்திரம் வாகனத்தில் ஏற்றிச் சென்று வழியில் இறக்கி எனது உடைகளைக்களைந்து இரக்கமற்ற முறையில் தாக்கினர். இரும்புப் பைப்பினால் தலையில் தாக்கினர். தலையிலிருந்து இரத்தம் வடிந்த நிலையில் என்னை மின் கம்பத்துடன் சேர்த்துக் கட்டினர். ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிடுவதிலிருந்துவிலகி விட்டதாக எனது வீட்டில் அறிவிப்புப் பலகை ஒன்றை மாட்டும்படி கூறினர்—என்று சொன்னார். (அ-10)

## பஸ் சேவைகள் ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி )
பி. போ சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர் என்று சொல்லப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணிக்கு இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமானது.

இதையடுத்து உடனடியாக இராணுவ அதிகாரிகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர்.

யாழ். பஸ் டிப்போவில் நடந்த பேச்சுக்களை அடுத்து இரு தரப்புக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டு, காலை 11· 30 மணியளவில் மீண்டும் பஸ்சேவை வழமைக்குத் திரும்பியது. (இ-15-3)

# ஸ்ரீகோத்தாவில் பொலீஸார் தேடுதல்

கொழும்பு, பெப். 27

கொழும்பு கோட்டையிள்ள ஐ. தே. க. தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நேற்று முன்தினம் பொலீஸார் தேடுதல்களை மேற்கொண்டனர்.

5 வாகனங்களில் வந்த பொலீஸார், மேற்படி தலைமையகத்தில் ஆயுதங்கள் ஏதாவது மறைத்து வைக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய முயற்சித்தனர். எனிலும் எதுவும் பிடிபட்டதாகத் தெரியவில்லை.

கடந்த திங்கட்கிழமையும் இதே நடவடிக்கையின் பொருட்டு வந்த பொலீஸாரை ஸ்ரீகோத்தாவின் பாதுகாப்பு ஊழியர்கள் உள்ளேசெல்ல அனுமதிக்கவில்லை.

திரும்பிச் சென்ற பொலீஸார் நீதிமன்ற உத்தரவுடன் வந்தே நேற்றுமுன்தினம் தேடுதல்களை மேற்கொண்டனர்.

(இ-4)

# பிரதமர் ஸ்ரீமாவோவை ரணில் சந்தித்தார்

## அநுராவும் கூட இருந்தார்

எதிர்க்கட்சித் தலைவரும், ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை அவரது வீட்டில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிரதமரின் உடல் நிலை குறித்து விசாரித்த ரணில், நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

அரசியல் காடைத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ரணிலிடம் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீமாவோவின் மகனுமான அநுரா பண்டாரநாயக்காவும் உடன் இருந்தார். (இ-3-150)

# ஆஸியிலுள்ள இலங்கை பிக்கு மீது பாலியல் துன்புறுத்து குற்றச்சாட்டு

## ஜே. ஆரின் ஆலோசகராக இருந்தவர்

கொழும்பு, பெப் 27

இரு பெண்களை பாலியல் முறையில் துன்புறுத்தினார் என்று ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கைப் பிக்கு ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.

53 வயது நிரம்பிய பஞ்ஞாசார ககலப்பிட்டிய தேரர் என்ற இந்தப் பிக்கு குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் என்றும் — அவர் அளித்த வாக்கு மூலத்தில் காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கத்துக்கு அவர் ஆலோசகராக இருந்தார் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை அவர் மீது தீர்ப்பு வழங்கப்படவிருக்கின்றது.

பெயர்கள் அறிவிக்கப்படாத இந்த இரு பெண்களும் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் சோதிடம் பார்ப்பதற்கென பஞ்ஞாசார தேரரிடம் தாங்கள் சென்ற போது தம்மீது துஷ்பிரயோகம் இடம்பெற்றது என்று கூறினார்கள்.

பஞ்ஞாசாரதேரர் தமது சாட்சியத்தில் 12வயதிலிருந்து தாம் பௌத்த பிக்குவாக இருந்து வருவதாகவும் —

இலங்கை பல்கலைக்கழகத்தில் பௌத்த சமயத்தை ஒரு பாடமாகக் கொண்டு முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளதாகவும் — தெரிவித்தார்.

1988 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு தப்பிவந்ததாகக் கூறிய அவர் ஆஸ்திரேலியாவின் பேர்த்தில் உள்ள இலங்கை மக்களுக்குச் சேவை செய்யும் ஒரே ஒரு பிக்குவாகத் தாம் இருப்பதாகவும் கூறினார்.

பேர்த் நகரிலுள்ள சிலரும் தமிழர்களும் தம்மை இலங்கைக்கு நாடு கடத்தமுயற்சிக்கிறார்கள் என்று கூறிய பஞ்ஞாசாரதேரர் இலங்கையில தமது அரசியல் எதிரிகள் தம்மைக் கொன்று விடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார். (இ-4)

## காமினி அத்துக்கோறள...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நிவித்திகல பிரதேச சபைக்கான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் பிரேமசால் ஜெபசேகர அந்தப் பிரதேசத்தில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அப்பொழுது மலைப்பாங்கான வீதியில் அவரது வாகனம் நின்றுவிட்டது.

அப்பொழுது ஐ. தே. க. பொதுச் செயலாளரையும் அவரது குழுவினரையும் ஏற்றிவந்த ஜீப்புகள் அந்த வீதியை அண்மித்தன. நிறுத்கப்பட்டுள்ள வாகனம் உடனடியாக அகற்றப்பட வேண்டுமென்று அவர்கள் கோரினார்கள். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது காமினி அத்துக்கோறளவின் பாதுகாப்பு அதிகாரி ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தார்.

தம்மைக் கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காமினி அத்துக்கோறள இரத்தினபுரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-4)

## அன்ரனோவ் விமானச் சேவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
றிக் தொன் சரக்குகளையும் அனுப்ப இந்த விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இந்த விமானங்களின் சேவை நிறுத்தப்பட்டால், துருப்புக்கள் மற்றும் சரக்குகளை காங்கேசன்துறைக்கு எடுத்துச்செல்ல கடற்படையினரின் உதவி கோரப்பட்டுள்ளது.

அதே சமயம் கடந்த வெள்ளிக்கிழமை இரத்மலானை விமான நிலையத்தில் வீழ்ந்த 'அன்ரனோவ் 32' ரக விமானத்தில் குண்டு இருந்ததற்கான தடயங்கள் இல்லை என்று அரசாங்க பகுப்பாய்வாளர்களின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த விமானம் வீழ்ந்தமைக்கு சதிச் செயல் அல்லது தொழில் நுட்பக் கோளாறு காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இலங்கை விமானப்படை 95 ஆம் ஆண்டு ஏழு 'அன்ரனோவ் 32' ரக விமானங்களைக் கொள்வனவு செய்திருந்தது.

இவற்றில் மூன்று விமானங்கள் பல்வேறு இடங்களில் வீழ்ந்து நாசமாகி விட்டன.

(இ-3-4-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/[illegible] கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27- 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org